எம்.சி.ஓ.பி எண்: 5778/2022 தேதி: 23.06.2025

மசா. : 1

பெயர் : குமார்

த/பெ. : ராமர்

வயது : 51

**சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்**

**முதல் விசராணை**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன். .

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுவில் மற்றும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளபடி விபத்து நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சாலையில் வரும் வாகனங்களை கவனிக்காமல் சென்றதால் என்னுடைய அஜாக்கிருதையால் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. மாநகரபோக்குவரத்து ஓட்டுநர்விபத்துகாரணம் இல்லை எ்னறால் சரியல்ல. இந்த விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் டிஜ்சார்ஜ் ஆகும்போது பரிபுரணமாக குணமாகிவிட்டது எ்னறால் சரியல்ல. இந்த விபத்தினால் எனக்கு எந்த ஊனமோ, வருமான இழப்போ இல்லை எ்னறால் சரியல்ல. வரைபடம் மற்றும் குற்றப்பத்திரிக்கை , மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை எனக்கு எதிராக இருப்பதால்தான் அவைகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. விபத்து என்னுடைய அஜாக்கிருதையால் நடைபெற்றுள்ள காரணத்தால் எதிா்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவா் அல்ல என்றால் சாியல்ல.

X

**மறுவிசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது..